# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073053

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் கன்னியாகுமரி PS: காவல்நிலையம் V&AC Nagercoil Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 7/2019 Date: நாள் 12.07.2019

2. (i) Act சட்டம்: குற்றவியல் நடைமுறை சட்டம் ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தம் 2018) Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 102 Cr.P.C r/w 7 of the PC Act 1988 (as amended in 2018)

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.05.2019 19.30 hrs. to Date to : நாள் வரை 29.05.2019 22.50 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS, Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.05.2019 Time : நேரம் 23.50 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Edalakudi Sub-Registrar's Office, North East about 4 kms

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.பாண்டியம்மாள் தனிவட்டாட்சியர் நிலமெடுப்பு (தே.நெ) நாகர்கோவில். (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர் நிலமெடுப்பு (தே.நெ) நாகர்கோவில். (g) Address : முகவரி நிலமெடுப்பு (தே.நெ) நாகர்கோவில்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr.K.Easwaran, Assistant, i/c Sub-Registrar, Edalakudi.
2. Tr.A.Kannan, Junior Assistant, O/o the Sub-Registrar, Edalakudi.
3. Tr.Y.Ramanathan, age 55, S/o Yogeeswaran Pillai, 2-70, Vadakku Theru, Osaravilai, (PI)
4. Tr.V.S.Sivaprasad, age 25, S/o Vijaya Raghavan, Elanthavilai, Pallam Post, (PI)

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

For obtaining permission from the Head of the Department to register a case

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

2

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

1.Tr.K.Easwaran, Assistant, i/c Sub-Registrar, Edalakudi.

2. Tr.A.Kannan, Junior Assistant, O/o the Sub-Registrar, Edalakudi.

3. Tr.Y.Ramanathan, age 55, S/o Yogeeswaran Pillai, 2-70, Vadakku Theru, Osaravilai, (PI).

4. Tr.V.S.Sivaprasad, age 25, S/o Vijaya Raghavan, Elanthavilai, Pallam Post, (PI)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் 29.06.2019-ம் தேதி இரவு சுமார் 23.50 மணியளவில் அலுவலக பணியில் இருந்தபோது திருமதி.T.பாண்டியம்மாள், தனி வட்டாட்சியர் தேசிய நிலமெடுப்பு, தேசிய நெடுஞ்சாலை 7 மற்றும் 47, நாகர்கோவில-II அவர்கள் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவையும் அத்துடன் இணைக்கப்பட்ட செயல் முறை நடவடிக்கை ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்டபணம் மொத்தம் ரூ. 71,275/- ஆகியவற்றை பெற்று அந்த புகார்மனுவில் குறிப்பிட்டுள்ள மார்ஜினில் குறிப்பட்டுள்ள அரசு அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி பெற ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகத்துக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி அதன்படி இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களது குறிப்பாணை SC.No. 21323/2019/REGN/KK, dt.10.07.2019 பெற்று இன்று 12.07.2019 பிற்பகல் 17.30 மணிக்கு கன்னியாகுமரி பிரிவு கு.எண். 07/2019 u/s 102 Cr.P.C r/w 7 of the P.C Act 1988 (as amended in 2018) ஆக மார்ஜினில் கண்ட எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார்புகார் மனு விபரம் பின்வருமாறு. அனுப்புநர் T.பாண்டியம்மாள், தனி வட்டாட்சியர் நிலமெடுப்பு (தே.நெ), நாகர்கோவில் அலகு-II. பெறுநர் திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/07/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G.MATHIALAGAN
Rank: நிலை DSP ........No. எண் ..........
VEAC, Nagercoil

மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். அய்யா, பொருள்: கன்னியாகுமரி மவாட்டம்-இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம்-திடீர் இணை ஆய்வு—விபரம் மேல் நடவடிக்கைக்கு அனுப்புவது சம்பந்தமாக: இன்று 25.05.2019 ஆம் தேதி நான் அலுவலக பணி முடித்து வீட்டில் வந்த பொழுது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அலை பேசி மூலம் கிடைக்கப்பெற்ற உத்தரவின் பேரில் மாலை சுமார் 6.45 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு நாகர்கோவில் அலுவலகத்திற்கு சென்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களை பார்த்தேன். அப்பொழுது அவர் கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளர் அங்கு வரும் பொது மக்களிடமும் மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் லஞ்சம் பெற்று அலுவலக நேரம் முடிந்த பின் லஞ்ச பணத்துடன் வெளியே செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அந்த அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுகொண்டதற்கு இணங்க நானும் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மதியழகன் அவர்கள், ஆய்வாளர்கள் திரு.ராஜு மற்றும் திருமதி ரெமா அவர்களுடன் பார்டிசகிதம் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் இரவு சுமார் 7.15 மணிக்கு சென்று சார் பதிவாளர் அலுவலகத்தை கண்காணிக்கப்பட்டது. அதன் பிறகு இரவு சுமார் 7.30 மணிக்கு சார் பதிவாளர் அலுவலகத்தை பூட்டி விட்டு சார் பதிவாளர் மற்றும் ஊழியர்கள் வெளியே வருவதாக இருந்த போது எங்களை பார்த்தவுடன் அலுவலக வளாகத்தில் இருந்து சற்று மேற்கு பக்கமாக நடந்து போன சார் பதிவாளரையும் அவருடன் நின்று இருந்த நபரையும் மற்ற நபர்களையும் அழைத்து திடீர் இணை ஆய்வு நடத்திய போது சார் பதிவாளர் அலுவலக வளாத்திற்கு உள்ளே வெள்ளை பேப்பரில் பொட்டலங்களாக பொதிந்து போடப்பட்டிருந்த ரூபாய் நோட்டுக்களும் தனியாக போடப்பட்டிருந்த ரூபாய் நோட்டுக்களையும் மேலும் அங்கு நின்று கொண்டிருந்த சார் பதிவாளர் அலுவலக ஊழியர் களிடம் இருந்த பணம் மற்றும் இராமநாதன் என்ற பத்திர எழுத்தரிடம் இருந்த ரூபாய் 25550/- மற்றும் சிவபிரசாது என்பவரிடம் இருந்த ரூபாய் 5440/-யும் பற்றி அவர்களிடம் கேட்டதற்கு அவர்ள திருப்திகரமாக பதில் கூறாததால் அந்த பணம் மொத்தம் ரூ.71275/- லஞ்ச பணமாக இருக்கலாம் என கருதி அந்த தொகையையும் ரூபாய் நோட்டுக்கள் பொதிந்து வைத்திருந்த வெள்ளை தாளில் கருப்பு மையினால் இராமன் 1000/- சத்யா 500/- கீதா 300/- என எழுதப் பட்டிருந்த துண்டு பேப்பர்களையும் சார் பதிவாளர் அலுவலக தனி நபர் கையிருப்பு பண பதிவேட்டையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவ்வாறு கைப்பற்றப்பட்ட பணம் துண்டு பேப்பர் தனி நபர் கையிருப்பு பண பதிவேட்டையும் திடீர் இணை ஆய்வின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையுடன் இணைத்து சார் பதிவாளர் திரு.ஈஸ்வரன் அலுவலக ஊழியர்கள் கண்ணன் மற்றும் பத்திர எழுத்தர்கள் இராமநாதன் மற்றும் சிவபிரசாது ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க கேட்டு சமர்பிக்கிறேன். ஒப்பம் 25/5/19 தனி வட்டாட்சியர் நிலமெடுப்பு (தே.நெ) நாகர்கோவில் அலகு-II நாகர்கோவில் 29/5/19.

Sir, Received the complaint on 29.05.2019 at 23.50 hrs along with Proceedings, seized unaccounted money Rs.71,272/- and documents and send the copy of complaint and proceedings to Director, DVAC, Chennai for

obtaining permission from the Head of the Department to register the case. Signed 29/05/2019. DSP, V&AC, Ngl.

Received the memo of the Director, DVAC, Chennai in SC No.21323/2019/REGN/KK, dt.10.07.2019 to register the case against the suspect officers involved in the surprise check with reference to the report dt.29.05.2019 and registered a in Nagercoil V&AC, Cr.No.07/2019 u/s 102 Cr.P.C r/w 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) on today 12.07.2019 at 17.30 hrs. Signed 12/07/19, DSP, V&AC, Ngl.

கன்னியாகுமரி மாவட்ட நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை 7 மற்றும் 47, நாகர்கோவில் யூனிட்-II தனி தாசில்தார் அவர்களின் செயல்முறை நடவடிக்கை

இன்று 29.05.2019ம் தேதி மாலை சுமார் 19.30 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி கச்சேரி ரோடில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் திருமதி.T.பாண்டியம்மாள், தனி தாசில்தார், நிலமெடுப்பு தேசிய நெடுஞ்சாலை 7 மற்றும் 47, நாகர்கோவில் யூனிட்-II அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் இணைஆய்வின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு.

முன்னிலை:

1)திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

2)திரு.J.ராஜு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

3)திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி கச்சேரி ரோட்டில் வடக்கு பார்த்த வாசலுடன் காம்பவுண்ட் சுவரோடு கூடிய பழைய ஓட்டு கட்டிடத்தில் இயங்கிவரும் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு, வில்லங்கம், நகல் எடுப்பு மற்றும் பதிவு செய்வது சம்பந்தமான வேலைகளுக்கு வரும் பொதுமக்களிடம் சார் பதிவாளர் லஞ்சம் பெற்று வருவதாகவும் லஞ்ச பணத்தை அலுவலக நேரம் முடிந்த பின் அவர் வெளியே செல்லும்போது புரோக்கர்களான பத்திர எழுத்தர்கள் மூலம் பணம் வசூலித்து பெற்று செல்வதாகவும் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இன்று 29.05.2019-ம் தேதி மாலை சுமார் 17.45 மணிமுதல் அலுவலகத்தின் வெளியே ஆங்காங்கே சந்தேகம் வராதவாறு காத்திருந்து இரவு சுமார் 19.30 மணியளவில் அலுவலகத்தை பூட்டி விட்டு சார் பதிவாளர் அவர்கள் அலுவலக வளாகத்தை விட்டு வெளியே வருவதற்கு முன்பே திடீர் இணை ஆய்வு செய்வதற்காக அலுவலக வளாகத்துக்குள்ளே வரப்பட்டது. அப்போது சார்பதிவாளர் திரு.K.ஈஸ்வரன் அவர்கள் அலுவலக வளாகத்தினுள் மேற்கு பக்கம் நிறுத்தப்பட்டிருந்த அவரது TN-02-AT 3232 எண்கொண்ட Passion Pro இருசக்கிர வாகனத்துக்கு அருகில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த பத்திர எழுத்தர் திரு.இராமநாதன் என்பவருடன் நின்று கொண்டிருந்தார். சார் பதிவாளர், தணிக்கை குழுவினை பார்த்தவுடன் சற்று மேற்கு பக்கம் சென்று கழிவறை பக்கத்தில் இருந்த தண்ணீர் தொட்டி அருகே சென்று அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்கபாக்கெட்டிலிருந்து

கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து தரையில் போட்டார். உடனே அவரது அருகில் சென்று அவர் கீழே போட்ட பணத்தை எடுத்து பார்த்தபோது அதில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் 42 இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அவர் அன்றைய தினம் பத்திர எழுத்தர்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்காக கொடுத்த பணம் என்று சொன்னார். பின்னர் அவரையும் அவருடன் நின்று கொண்டிருந்த பத்திர எழுத்தர் திரு.இராமநாதன் என்பவரையும் அழைத்துக்கொண்டு அலுவலக முன் பகுதிக்கு வரப்பட்டது. திடீர் இணை ஆய்வின் போது சார் பதிவாளர் அலுவலக வளாகத்தினுள் முன் பகுதியில் சார் பதிவாளர் அலுவலக ஊழியர்களான உதவியாளர் திருமதி குமாரி, இளநிலை உதவியாளர் திரு.எம். செல்வமூர்த்தி, இளநிலை உதவியாளர் திரு.ஏ.கண்ணன், அலுவலக உதவியாளர் திரு.என்.ராமு மற்றும் வெளிநபரான திரு.சிவபிரசாத் ஆகியோர்கள் இருந்தனர். அலுவலகத்தின் முன் பகுதியை சோதனை செய்தபோது அலுவலக வராந்தாவில் தொங்கவிடப்பட்டிருந்த தீயணைப்பு வாளியின் கீழே தரையில் சிதறி கிடந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிபார்த்ததில் அது மொத்தம் ரூபாய் 3235/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி அலுவலக முன்பகுதியில் நின்று கொண்டிருந்த ஊழியர்களிடம் கேட்டபோது அவர் தங்களுக்கு தெரியாது என்று தெரிவித்தார்கள். மேலும் அலுவலக காம்பவுண்ட் கேட்டின் மேற்கு பக்க மூலையில் பேப்பரில் பொதிந்த நான்கு பொதிகள் கிடந்தது.அதை எடுத்து பிரித்து பார்ததில் முதல் பொதியில் ரூபாய் 12150/-ம் இரண்டாவது பொதியில் ரூபாய் 1000/- இருந்தது. அந்த பேப்பரில் ராமன் 1000 என்றும், மூன்றாவது பொதியில் ரூபாய் 500/- இருந்தது. அந்த பேப்பரில் சத்யா 500 என்றும், நான்காவது பொதியில் ரூபாய் 300/- இருந்தது. அந்த பேப்பரில் கீதா 300 என்றும் கறுப்பு மையினால் எழுதப்பட்டிருந்தது. அந்த பணம் பற்றியும் சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்களிடம் கேட்டபோது அதுபற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார்கள். எனவே தகுந்த முகாந்திரம் கூறாததால் அந்த பணத்தையும் பணத்தை பொதிந்து வைத்திருந்த ராமன், சத்யா, கீதா என்று எழுதப்பட்ட பேப்பர்களையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலக வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பத்திர எழுத்தர் இராமநாதன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய் 25550/- இருந்தது. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும் இன்றைய தினம் அவர் 10 பத்திரங்கள் பதிந்ததாகவும் நாளையும் பத்திரங்கள் பதியவேண்டியிருப்பதாகவும் அது சம்பந்தமாக சார் பதிவாளரை சந்திக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்திற்கு அவர் கூறிய பதில் மற்றும் இரவு 19.30 மணிக்கு சார் பதிவாளர் அலுவலக வளாகத்தினுள் சார் பதிவாளரை தனியாக சந்தித்து பேசிக்கொண்டிருந்ததாலும் அவர் வைத்திருந்த பணம் சார் பதிவாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்காக அந்த பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கு நின்றுகொண்டிருந்த அலுவலக ஊழியர் திரு.கண்ணன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய் 2100/- காணப்பட்டது.. அந்த பணத்தை பற்றி அவரிடம் கேட்டபோது அது அவரது சொந்த பணம் என்று தெரிவித்தார். அலுவலக வளாகத்துக்குள் நின்று கொண்டிருந்த வெளி நபரான திரு.சிவபிரசாத் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய் 5440/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்டபோது

அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும் நாளை பதிய வேண்டிய பத்திரங்களுக்கு டிராப்ட் சரி பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார். அவர் தெரிவித்த பதில் திருப்தி அளிக்காததால் அவர் வைத்திருந்த பணமும் சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தை திறந்து உள்ளே வந்து தணிக்கை செய்யப்பட்டது. இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகமானது. இடலாக்குடி கச்சேரி ரோடில் வடக்கு பார்த்த வாசலுடன் காம்பவுண்ட் சுவரோடு கூடிய சுமார் 20 சென்ட் பரப்பளவில் உள்ள பழைய ஓட்டு கட்டிடமாகும். இந்த கட்டிடத்தின் முன் வராந்தாவும் அதை தொடர்ந்து ஹாலும் உள்ளது இந்த ஹாலில் வடக்கு பார்த்து சார் பதிவாளரின் இருக்கையும் அதற்கு கிழக்கு பக்கம் கணினியும் அதை இயக்குபவரின் இருக்கையும் அமைந்துள்ளது. சார் பதிவாளரின் இருக்கைக்கு இடது பக்கம் கணினி அறையும் அதை தொடர்ந்து ஆவண வைப்பறையும் சேர்ந்து உள்ளது. அரசு உத்தரவு மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுபடி லஞ்சம் பற்றிய புகார்களை தெரிவிப்பதற்காக அரசு தெரிவித்துள்ளபடி லஞ்சம் பற்றிய விழிப்புணர்வு வாசகம் மற்றும் லஞ்ச புகார்களை தெரிவிக்கவேண்டிய தொலைபேசி எண் மற்றும் முகவரி அடங்கிய அறிவிப்பு சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்பகுதியிலோ அல்லது வேறு பகுதியிலோ பொதுமக்கள் பார்வையில் படும்படி வைக்கப்படவில்லை. திடீர் இணை ஆய்வின்போது அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவந்த தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு பார்வையிட்டதில் கடைசியாக 27.05.2019-ல் அலுவலகர்களின் கையிருப்பு தொகை பற்றி எழுதப்பட்டிருந்தது. 29.05.2019 தேதியில் ஊழியர்களின் கையிருப்பு தொகை பற்றி எதுவும் எழுதப்படவில்லை. எனவே அலுவலக ஊழியர் திரு.கண்ணன் என்பவர் வைத்திருந்த ரூபாய் 2100/-ஐம் ஆக மொத்தம் ரூபாய் 71,275/-க்கு திருப்திகரமாக முகாந்திரம் கூறப்படாததால் அந்த பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் எனகருதி அந்த தொகை யையும், தனிநபர் கையிருப்பு பணப்பதிவேட்டையும் விசாரணைக்காக கைப்பற்றப் பட்டது. சார் பதிவாளரிடம் அலுவலகத்தில் ரொக்க வசூல் எதுவும் உண்டா என்று விசாரித்த போது அரசு கடித எண்.(Ms) No.153, நாள்.05.12.2018-படி கடந்த 3 மாதங்களாக ரொக்கமாக வசூல் எதுவும் கிடையாது என்றும் படைவீரர் கொடி-2018 நிதி மட்டும் அவ்வப்போது ரொக்கமாக வசூல் செய்யப்பட்டு வந்ததாகவும் இலக்கு தொகையான ரூபாய் 80,000/- கடைசியாக 24.04.2019 வரை வசூல் செய்யப்பட்டு அத்தொகைக்கு 30.04.2019 அன்று வங்கி வரைவோலை பெறப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 02.05.2019 அன்று செலுத்தப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டதாகவும் தெரிவித்தார். இந்த செயல் முறை நடவடிக்கை இன்று 29.05.2019 இரவு 19.30 மணிக்கு ஆரம்பித்து இரவு 22.50 மணிக்கு முடிக்கப்பட்டது. S/d 29/05/2019, Spl.Tah.LA N.H-7&47 Ngl-Unit-II.

The original FIR, Complaint, Proceedings of the Special Tahsildar, Land Acquisition National Highways 7 & 47, Nagercoil Unit-II, Memorandum in SC No.21323/2019/REGN/KK, dt.10.07.2019 of the DVAC were sent to the Honourable Chief Judicial Magistrate cum Special Judge Court, Kanyakumari District @ Nagercoil and copies sent to the concerned higher officials.

12/07/19
G.MATHIALAGAN,
DSP, VSAC

அனுப்புநர்
T. பாண்டியம்மாள்
தனி வட்டாட்சியர்
நிலமெடுப்பு (தேசிய)
நாகர்கோவில் அலகு-II

பெறுநர்
திரு. கெ. மரியதாசன்
காவல்துறை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை
கன்னியாகுமரி பிரிவு
நாகர்கோவில்

ஐயா,

பொருள்:- கன்னியாகுமரி மாவட்டம் - இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகம் - திடீர் சோதனை ஆய்வு - விபரம் மேல் நடவடிக்கைக்கு அனுப்புவது சம்பந்தமாக

---

இன்று 29.5.2019 ஆம் தேதி நான் அலுவலக பணி முடிந்து வீட்டுக்கு செல்லும்போது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அலைபேசி மூலம் கிடைக்கப்பெற்ற உத்தரவின் பேரில் மாலை சுமார் 6.45 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு நாகர்கோவில் அலுவலகத்திற்கு சென்று காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களை பார்த்தேன். அப்போது அவர் கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில், சார் பதிவாளர் அந்த உடன் பொது மக்களிடமும், மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் லஞ்சம் பெற்று அலுவலக நேரம் முடிந்த பின் லஞ்ச பணத்துடன் வெளியே செல்ல நாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அந்த

அலுவலகத்தை திடீர் கிளை ஆய்வு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க
நானும், காவல் துறை கண்காணிப்பாளர் திரு. மதியழகன்
அவர்கள், ஆய்வாளர்கள் திரு. ராஜி மற்றும் திருமதி.
ஏஜோ அவர்களுடன் பார்ப்பு சகிதம் இடலாக்கிடு
சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அதிகாலையில்
காலை சுமார் 7.15 மணிக்கு சென்று சார்பதிவாளர்
அலுவலகத்தை கண்காணிக்கப்பட்டது. அதன் பிறகு
காலை சுமார் 7.30 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தை
பூட்டி விட்டு சார்பதிவாளர் மற்றும் ஊழியர்கள் வெளியே
வருவதாக இருந்தவை(கள்) எங்களை பார்த்தவுடன்
அலுவலக வளாகத்திலிருந்து சற்று மேற்கு பக்கமாக
நடந்து போன சார்பதிவாளரையும், அவருடன் நின்று
இருந்த நபரையும் மற்ற நபர்களையும் அழைத்து
திடீர் கிளை ஆய்வு நடத்த போவது சார்பதிவாளர்
அலுவலக வளாகத்திற்கு உள்ளே சென்று
குப்பியில் பொட்டலங்களாக பொதித்து போடப்பட்டிருந்த
ரூபாய் நோட்டுகளை தனியாக கட்டப்பட்டிருந்த
ரூபாய் நோட்டுகளையும், மேலும் அங்கு நின்று
கொண்டிருந்த சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களிடம்

இருந்த பணம் மற்றும் கோடைசாமி என்ற பதிவு
எழுத்தரிடம் இருந்த ரூபாய் 25550/- மற்றும்
சிவபிரசாத் என்பவரிடமிருந்து ரூபாய் 5440/-யையும்
பற்றி அவர்களிடம் கேட்டதற்கு அவர்கள்
திருப்திகரமான பதில் கூறாததால் அந்த பணம்
மொத்தம் ரூ-71,275/- லஞ்சப்பணமாக இருக்கலாம்
என கருதி அந்த தொகையையும் ரூபாய் நோட்டுகள்
பொதிந்து வைத்திருந்த வெள்ளை தாளில் கறுப்பு
மையினால் ராமன் 1000/-, சந்திரா 500/-, தரா
300/- என எழுதப்பட்டிருந்த துண்டு பேப்பர்
களையும் சார்பதிவாளர் அலுவலக தனி உபர்
கையிருப்பு பணப்பதிவேட்டையும் விசாரணைக்காக
கைப்பற்றப்பட்டது.

அவ்வாறு கைப்பற்றப்பட்ட பணம், துண்டு பேப்பர்
தனி உபர் கையிருப்பு பணப்பதிவேட்டையும் திரு. கிளை
ஆய்வின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை
உடமைக்குறிப்புடன் இணைந்து சார்பதிவாளர் திரு.செல்வராஜ்
அலுவலக உதவியாளர் திரு. கண்ணன், மற்றும் பதிவு

எழுத்தர்கள் ராஜமனோகரன், மற்றும் சிவபிரகாஷ் ஆகியோர்கள்
மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டி
சமர்ப்பிக்கிறேன்

நாகர்கோவில்
29/5/19

[signature] 29/5/19
[illegible] [illegible]
நாகர்கோவில் அலகு-II

Sir,

Received the complaint on 29.05.19 at 23.50 hrs along with Proceedings, Seized unaccounted money Rs. 71,275/- and documents and send the copy of Complaint and proceedings to the Director, DVAC Chennai for obtaining permission from the Head of the Dept to register the case.

[signature]
29/05/19.
DSP, V&AC,
Ngl.

Received the memo of the Director, DVAC, Chennai in SC No 21323/2019/REGN/KK dt. 10.07.19 to register the case against the suspect officers involved in the Surprise check with reference to the Report dt. 29.05.2019 and registered a case in Nagercoil V&AC, Cr. No 07/2019 u/s. 102 CrPC r/w 7a the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) on 12.07.19 at 17.30 hrs. [signature]